Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 88 | thalaivaasaltv@gmail.com | வியாழக்கிழமை | டிசம்பர் 31, 2020




## யாழ் மாநகர சபையில் நடந்தது தனிப்பட்ட அரசியல் காய் நகர்த்தல்களாம்

### இப்படிச் சொல்கிறார் சட்டத்தரணி குருபரன்



அறுதிப் பெரும்பான்மை (ளைஅிடந அயதழசவைல) பெறத் தவறியிருந்தாலும் அதிக ஆசனங்கள் பெற்ற கட்சியை (ளைபெடந டயசபநளவியசவல) குறித்த உள்ளூராட்சி சபையை நிர்வகிக்க விட வேண்டும் என்று நான் 2018இல் பகிரங்கமாகவே கூறியிருந்தேன். அப்படி 03

## இன்றும் ஒருவருக்கு தொற்று: மருதனார்மடம் கொத்தணி 13 ஆக அதிகரிப்பு

மருதனார் மடம் கோரோனா வைரஸ் தொற்றுப் பரவல் கொத்தணியில் மேலும் ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஆய்வுகூடத்தில் இன்று (டிசெ. 31) வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்ட 03

# கொரோனா பலியெடுப்பு 204

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி மரணித்தவர்களின் எண்ணிக்கை 204ஆக அதிகரித்துள்ளது. இன்றைய அறிக்கையின் பிரகாரம் ஐவர் மரணித்துள்ளனர்.

அவர்களில். நால்வர் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். ஐவரில் நால்வர் பெண்கள் ஆவர், ஹோமகமையைச் சேர்ந்தவர் 59 வயதான ஆண் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தர்கா நகரைச் சேர்ந்த 72 வயதான ஆண், கொழும்பு-5யைச் சேர்ந்த 61 வயதான பெண், கலேவலயைச் சேர்ந்த 46 வயதான ஆண். பெல்மதுளையைச் சேர்ந்த 75 வயதான ஆண் ஆகியோரே இவ்வாறு மரணித்துள்ளனர்.

## மண்ணுக்குள் புதைந்த நிலையில் சிசுவின் சடலம் மீட்பு

### அரியாலையில் சம்பவம்

இளம் பெண் ஒருவருக்குப் பிறந்த சிசுவை மண்ணுக்குள் புதைத்தமை தொடர்பில் சம்பவ இடத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அரியாலை, புங்கங்குளம் பகுதியில் உள்ள வீடொன்றின் வளாகத்திலிருந்து சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

24 வயதுடைய திருமணமாகாத பெண் ஒருவர் குருதிப் போக்குக் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று சேர்க்கப் பட்டுள்ளார். 03

## கிளிநொச்சி கரடிப்போகிலுள்ள நெல் சந்தைப்படுத்தல் அலுவலக அதிகாரி

### இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் கைது

நெல் சந்தைப்படுத்தல் சபையின் வடக்கு மாகாண பிராந்திய அலுவலக அதிகாரி ஒருவர் குற்ற புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி கரடிபோக்க சந்தியில் அமைந்துள்ள நெல் சந்தைப்படுத்தல் சபையின் வடக்குமாகாண பிராந்திய அலுவலகத்தில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக 03

## இரவிரவாய் இயங்கும் வலி கிழக்கு பிரதேச சபை

இன்றுடன் நிறைவுறும் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டு முன்னெடுக்கப்படாதுள்ள அபிவிருத்தி வேலைகளை அவ்வாண்டுக்குள்ளேயே ஆரம்பிக்க வேண்டும் என்ற நோக்கில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் அலுவலகப் பணிகள் இரவும் முன்னெடுக்கப் பட்டுள்ளன. 03



## தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தும்

## கருணை மனுவிற்கு ஆதரவுகோரி சர்வமதத்தலைவர்களுடன் சந்திப்பு!

தமிழ் அரசியல் கைதிகளை கருணை அருப்படையிலாவது விடுவிக்குமாறு கோரும் கருணை மனுவிற்கு ஆதரவுகோரி யாழ் மாவட்டத்திலுள்ள சர்வமதத் தலைவர்களுடன் அரசியல் கைதிகளின் உறவுகள் இன்று சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

ஒன்றுபட்டு தமிழ் அரசியல் கைதிகளை சிறைமீட்க வலியுறுத்தி அரசியல் கட்சி தலைவர்களையும் ஆன்மீகத் தரப்பினரையும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் கடந்த நாட்களில் தொடர்ச்சியாக நேரில் சந்தித்து வலியுறுத்தி வருகின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வரும் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் இன்று (டிச-31) வியாழக் கிழமை சர்வமத் தலைவர்களுடன் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சிறைச்சலைகளுக்குள் தொற்றா நோய்களினால் பீடிக்கப்பட்டு பாதிக் கப்பட்டுள்ளதுடன், உடல் அளவிலும் மனதளவிலும் பலவீனப்பட்ட நிலையில் காணப்படும் தமது உறவுகளை 03



# இலங்கை அரசை மோடி எச்சரிக்க வேண்டும்

## வலியுறுத்துகிறார் திமுக எம்பி டி.ஆர் பாலு

ஈழத் தமிழர்களின் குறைந்தபட்ச சுயமரியாதையையும் பறிக்கும் - மாகாண ஒழிப்பு - திட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டும் என்றும், அது, இந்திய - இலங்கை உறவில் மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்குக் கடுமையான எச்சரிக்கை விடுக்க வேண்டும் என, திமுக பொருளாளரும் பாராளுமன்ற திமுக குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக, டி.ஆர்.பாலு இன்று (31) அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை தெரிவித்துள்ளார்.

"ஈழத்தமிழர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்கிட, தொடர்ச்சியாகக் கொண்டிருக்கும் அதே உள்நோக்கத்துடன், "இலங்கையில் மாகாணங்கள் ஒழிக்கப்படும்" என்று இலங்கை அரசு அறிவித்து, அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது கடும் கண்டனத்திற்குரியது.

ராஜபக்ச சகோதரர்கள்புதிதாக ஆட்சிக்கு வந்ததில் இருந்து, ஈழத் தமிழர்களின் உரிமைகளை முற்றாகப் பறிக்கும் விதத்திலும் அவர்களின்



சுயமரியாதை மற்றும் கண்ணியத்தைச் சீர்குலைக்கும் விதத்திலும், ஒவ்வொரு நாளும் எடுத்து வரும் நடவடிக்கைகளை மத்திய பாஜக அரசும் கண்டுகொள்ளாமல் அமைதி காப்பது மிகுந்த கவலையளிக்கிறது.

மாகாணங்களை ஒழிக்கும் திட்டம், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவான 13-வது சட்டத் திருத்தத்திற்கு எதிரானது. அந்தச் சட்டத் திருத்தத்தையே அகற்றி விடும் ஆணவம் மிக்க, அக்கிரமமான நடவடிக்கை இது. இந்தியாவுடன் போட்ட ஒப்பந்தமே மதிக்கப்படாமல், கேள்விக்குறியாக்கப்படுகின்ற இந்த நெருக்கடியான நேரத்தில் கூட, நமது வெளியுறவுத்துறை அமைச்சரோ, சமீபத்தில் இலங்கை சென்று வந்த தேசியப் பாதுகாப்பு ஆலோசகரோ, ஏன், நம் பிரதமரோ, வாய் திறக்காமல் இருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

தமிழர்களுக்கு அதிகாரம் அளிப்போம், அதுவும் 13-வது திருத்தச் சட்டத்திற்கும் அதிகமான அதிகாரம் அளிப்போம் என்றெல்லாம் பேசி விட்டு, தற்போது தமிழர்களுக்கென இருக்கின்ற மாகாணங்களையும் ஒழிப்போம் என்பதை, இந்திய அரசு எப்படி, ஏன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது?

ஈழத் தமிழர்களுக்கு தற்போது இருக்கின்ற குறைந்தபட்ச சுயமரியாதையையும் பறிக்கும் இந்த மாகாண ஒழிப்பு திட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டும் என்றும், அப்படியொரு முடிவு, இந்திய - இலங்கை உறவில் மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும்என்றும், பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்குக் கடுமையான எச்சரிக்கை விடுக்க வேண்டும் என்றும், திமுகவின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன் என அவர் தெரிவித்துள்ளார்.

# யாழில் 5 ஆயிரத்து 731 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 5 ஆயிரத்து 731 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் தற்போதைய கொரோனா நிலைமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இதுரையான காலப்பகுதியில் 149 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில், 26 பேர் பூரண குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களுடன் நெருங்கிப் பழகிய சுமார் 2 ஆயிரத்து 35 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து731 பேர்தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இவர்களுக்கு தொடர்ச்சியாக 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உணவு பொதிகள் இரண்டு தடவைகளில் அந்தந்த பிரதேச செயலகத்தினூடாக வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் ஊடாக குறித்த நிதியினை பெற்று அதற்குரிய வேலைத்திட்டத்தினை முன்னெடுத்து வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த நிலைமையில் தொற்று மேலும் பரவாது இருப்பதற்கு மக்களின் அவதானமான செயற்பாடு மிகவும் முக்கியமானது என்பதோடு, மக்கள் குறித்த விடயங்கள் தொடர்பாக அவதானமாக செயற்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

# 11 நாட்களில் 50 பேர் பலி 1398 பேர் கைது



இலங்கையில் கடந்த 11 நாட்களில் மட்டும் 50 பேர் விபத்துக்களில் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கூறியுள்ளார்.

மேலும் மது போதையில் வாகனம் செலுத்தியமைக்காக கடந்த 11 நாட்களில் 1,398பேர்கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, நாடளாவிய ரீதியில் கடந்த மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் இதுவரையில் 613 வீதி மற்றும் வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளன.

இதன்போது 50 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்துகளில் சிக்கி 132 பேர் படுகாயமடைந்துள்ளதுடன், 291 பேர்சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில் நாளொன்றுக்கு ஐவர் என்ற அடிப்படையில் இவ்வாறு உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன.

இந்த விபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பிருந்தும் கவனக்குறைப்பாட்டின் காரணமாக அதனை தவிர்த்துக் கொள்ள முடியாமல் போயுள்ளது.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தரவுகளுன் அடிப்படையிலேயே இந்த பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாறு தரவுகள் கிடைக்கப்பெறாத விபத்துக்களும் இடம்பெற்றிருக்க வாய்ப்புள்ளது. மோட்டார் வாகனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசேட சோதனை நடவடிக்கைகளுக்கமைய மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்காக இன்று காலை ஆறு மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலயத்திற்குள் 82 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதற்கமைய கடந்த 11 நாட்களில் மதுபோதையில் வாகனம் செலுத்தியதாக 1,398 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றார்.



# இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கல்வி அமைச்சருக்கு எச்சரிக்கை கடிதம்

இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கல்வியற்கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்கு உடனடியாக ஆசிரியர் நியமனம் வழங்கக் கோரி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார் மேலும் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களாக இணங்கியபடி 2016/18 கல்வியாண்டிற்கான கல்வியற் கல்லூரிகளில் கல்வி கற்ற 3772 டிப்ளோமாதாரிகளுக்கு டிசம்பர் 31 ஆம் தேதிக்கு முன்னர் நியமனங்கள் வழங்க அரசாங்கம் தவறியதற்கு எதிராக அந்த டிப்ளோமாதாரிகளின் பங்களிப்புடன் எங்கள் சங்கம் ஜனவரி 4 ஆம் தேதி கல்வி அமைச்சின் முன் ஒரு போராட்டத்தை நடத்தும் என்பதை நாங்கள் உங்களுக்கு அறிவிக்கிறோம்.

2014 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தர சித்தி பெற்றவர்களின் மாவட்ட தகுதி மற்றும் பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களின் அடிப்படையில் கல்வியற்கல்லூரிகளில் 3 ஆண்டு டிப்ளோமா பாடநெறிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இந்த டிப்ளோமாதாரிகள் தங்கள் படிப்பை நிறைவுசெய்ய ஆறு ஆண்டுகள் கடந்தன.பாடநெறியின் இறுதி முடிவுகள் வெளியாகி இப்போது 9 மாதங்கள் ஆகின்றன.

இந்த டிப்ளோமாதாரிகள் உயிர்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்கள் மற்றும் கொரோனா தொற்றுநோய்களின் போது தொடர்ச்சியான துன்புறுத்தல்களுக்கு ஆளானார்கள். இதன் விளைவாக, அவர்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

மேலும் கல்வி அமைச்சகம் இந்த நியமனங்கள் தாமதப்படுத்துவதால் அவர்களுக்கும் ஆசிரியர் பற்றாக்குறையால் கடுமையாகப் பாதிக்கப் படுகின்ற மாணவர்களுக்கும் செய்கின்ற பாரிய அநீதியாகும்.

நியமனங்கள் வழங்குவது தொடர்பாக டிசம்பர் 10 ஆம் தேதி ஆன்லைனில் அவர்களின் நியமனங்களை பெற கல்வி அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அச்செயற்பாட்டில் பல சிக்கல்கள் எழுந்துள்ளன என்பதை நன்கு அறிந்த விடயமாகும். அதே நேரத்தில் டிசம்பர் 11 ம் தேதி, , எங்கள் சங்கம் அவர்களுக்கு இந்த நியமனங்கள் தொடர்பாக எழுந்த பிரச்சினைகள் குறித்து எழுத்துப்பூர்வமாக அறிவித்தது, மேலும் டிசம்பர் 14 அன்று அந்த பிரச்சினைகள் குறித்து விவாதிக்க ஒரு வாய்ப்பையும் கோரியது ஆனால், இதைக் கேட்காத கல்வி அமைச்சு இந்த நிலைமைக்கு முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

எனவே, கல்வி அமைச்சு இந்த விஷயத்தில் தீவிர கவனம் செலுத்தி ஆட்சேர்ப்பு அடிப்படையில் மேலும் தாமதமின்றி மற்றும் அவர்களுக்கு எந்தவித பிரச்சனையும் ஏற்படாமல் இந்த நியமனங்களை வழங்குமாறு பொறுப்புடன் கேட்டுக் கொள்கிறோம் என சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

# மேல் மாகாணத்தில் பாடசாலைகளை திறப்பதில் தாமதம் - ஜி.எல்.பீரிஸ்

எதிர்வரும் ஜனவரி 11ஆம் திகதி பாடசாலைகளை திறப்பதற்கான வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எனினும் மேல் மாகாணத்தில் பாடசாலைகளை திறப்பதில் மேலும் கால தாமதம் ஏற்படலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சேவையினை



செயற்படுத்துவது தொடர்பாக நேற்றைய தினம் விசேட கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யேமன் விமான நிலையத்தில் குண்டுவெடிப்பு: 26 பேர் உயிரிழப்பு



யேமன் நாட்டின் ஏடன் விமான நிலையத்தில் நடந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 26 ஆக அதிகரித்துள்ளது.

யேமன் நாட்டில் ஹவுதி கிளர்ச்சி யாளர்களுக்கும் அரசுப்படையினருக்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் நடைபெற்று வருகிறது.

அரசுப்படையினருக்கு சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் ஆதரவு அளிக்கின்ற அதேவேளை, ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் ஆதரவு அளித்து வருகிறது.

இந்நிலையில், சவுதி ஆதரவுடன் புதிதாக அமைந்துள்ள யேமன் அரசின் அமைச்சரவையில் பங்குபற்றியவர்கள் பயணித்த விமானம் அந்நாட்டின் எடன் விமான நிலையத்திற்கு நேற்று வந்தது.

அமைச்சரவை உறுப்பினர்கள் வந்திறங்கிய சில நிமிடங்களில் விமான நிலையத்தில் சக்திவாய்ந்த குண்டு வெடித்தது.

இந்த குண்டுவெடிப்பில் 10 பேர் உயிரிழந்ததாக முதற்கட்ட தகவல்கள் வந்திருந்த நிலையில், தற்போது இந்த சம்பவத்தில் இதுவரை 26 பேர் உயிரிழந்துள்ளதாக யேமன் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த குண்டுவெடிப்பில் 50 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், புதிதாக அமைந்துள்ள அரசை சீர்குலையச் செய்யவே ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இந்த தாக்குதலை நடத்தியுள்ளதாக யேமன் அரசு குற்றம் சுமத்தியுள்ளது.

## இரணைமடு குளத்தின் ஆறு வான்கதவுகள் திறப்பு!

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் ஆறு வான்கதவுகள் திறந்து விடப் பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று (புதன்கிழமை) கடும் மழை பெய்துள்ள நிலையிலேயே, குறித்த வான்கதவுகள் திறக்கப்பட்டதாக நீர்பாசன திணைக் களம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், தாழ்நிலப்பகுதி மக்களை அவதானமாக செயற்படுமாறு கிளிநொச்சி மாவட்ட இடர் முகா மைத்துவ மத்திய நிலையம் அறி வித்துள்ளது.

இதேவேளை, பன்னங்கண்டி, முரசு மோட்டை, பரந்தன், ஊரியான், கண்டா வளை மற்றும் உமையாள்பரம் உள்ளிட்ட பகுதி மக்களை அவதானமாக செயற் படுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழ். மாநகர...

செய்திருந்தால் நல்லூர் பிரதேச, பருத்தித்துறை நகர, சாவகச்சேரி நகர சபைகள் முன்னணியிடமும் ஏனையவை கூட்டமைப்பின் நிர்வாகத்திலும் இருந்திருக்கும். எல்லாம் தமக்கு வேண்டும் என்ற மமதையில் கூட்டமைப்பு செயற்பட்டது அன்று. முன்னணியின் தலைமை ஏற்ற போதும் முன்னணியிலும் சிலர் இந்த போர்முலாவை ஏற்க முன்வரவில்லை என வழக்கறிஞர் கலாநிதி குமாரவடிவேல் குருபரன் தனது முகநூலில் தெரி வித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இன்று நடந்து முடிந்திருப்பது அவரவரின் தனிப்பட்ட அரசியல் காய் நகர்த்தல்கள். இதில் மக்கள் நலன் மாத்திரம் தான் இருந்தது என்று சொல்வதெல்லாம் பொய். உள்ளூராட்சி சபை என்பது மக்களின் நாளாந்த சேவைகளை பெற்றுக் கொடுக்கும் ஒரு சேவை வழங்குநர் மாத்திரம் அல்ல அது மக்களோடு நாளாந்தம் தொடர்புக்கு வரும் ஓர் சனநாயக அமைப்பு.

அதில் என்ன செய்கின்றோம் என்பது எவ்வளவு முக்கியமோ அதே அளவு எமது அரசியல் செய்கையூடாக நாம் மக்களுக்கு எந்த அரசியல் அறம் முக்கியமானது என்பதை உணர்த்துகிறோம் என்பதும் முக்கியம். அறம் முக்கியமில்லை சாணக்கியம் தான் முக்கியம் அதிகாரம் தான் முக்கியம் என்றால் எதற்கான சாணக்கியம் என்று நாம் கூட்டமைப்பிடம் மீண்டும் மீண்டும் கேட்டதை மறந்துவிடாதீர்கள். இவ்வளவு நாள் இதை அறிந்து வைத்தவர்கள் என்று நாம் எண்ணியவர்களிடமே இதை மீள ஞாபகப்படுத்த வேண்டியிருப்பது காலக் கொடுமை. துன்பத்திலும் துன்பம்.

இருக்கட்டும். நல்ல நிர்வாகத்தைத் தரட்டும். ஆள வாய்ப்பளித்தால் எம்மாலும் ஆள முடியும் என்பதை நிரூபிக்கட்டும். தான் அறம் பிழைத்தவன் இல்லை என்பதை நிரூபிக்கவும் வாய்ப்பு வழங்குவோம். வேற என்ன செய்யிறது.

### இரவிரவாய்...

கொரோனாத் தொற்று சூழ்நிலைகளின் காரணமாகவும் வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட வருமதிகளின் தாமதத்தினாலும் மத்திய அரசாங்கத்தில் இருந்து கிடைக்கப்பெறும் அபிவிருத்திகளை பணம் திரும்பாது முன்னுரிமையில் மேற்கொள்ள வேண்டியிருந் தமையினாலும் சபையின் வேலைத்திட்டங்களில் ஒருபகுதி நிறைவுறுத்தப்படாது இருந்த நிலையில், அவ் அபிவிருத்தித் திட்டங்களையும் உரிய வருடத்திற்குள்ளே ஆரம் பிக்கப்பட்டால்

அபிவிருத்திகளின் பயனை மக்கள் விரைவாக அனுபவிக்க முடியும் என்ற அடிப்படையில் இரவும் அலுவலகப் பணியாற்றி 44 புதிய அபிவிருத்தித் திட்டங்களை இவ்வாண்டின் இறுதிநாளில் ஆரம்பித் துள்ளதாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டு திட்டங்கள் பல்வேறு காரணங்களால் அவ்வாண்டுக்குள் நிறை வேற்றப்படாத திட்டங்கள் அடுத்த ஆண்டின் அறுதிக் கணக்கின் பின்னரே மேற்கொள்ளச்சந்தர்ப்பம் உள்ளது. இந் நிலையில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை 2020 ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட எஞ்சிய வேலைகளையும் இவ்வாண்டுக்குள் ஆரம்பிக்க வேண்டும் என்ற நோக்கில் மார்கழி மாத நடுப்பகுதியில் அவசர அவசரமாக கேள்வி அறிவித்தலை மேற்கொண் டிருந்தது.

அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் கேள்வி திறக்கபட்டது. இந் நிலையிலேயே கேள்விக்குழுவின் தலைவர் தவிசாளர், சபை உறுப்பினர்கள், சபைச் செயலாளர், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட கேள்வித்திறத்தல் குழுவினர் கடமைநேரத்திற்கு புறம்பாக மேலதிகமாக இரவும் அலுவலகப் பணியாற்றி இவ்வருடத்தில் குறித்த வேலைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இன்றும்...

பிசிஆர் பரிசோதனைகளில் அவருக்கு தொற்று உள்ளதாக அறிக்கை கிடைத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் மருதனார்மடம் கோரோனா வைரஸ் தொற்று அடையாளம் காணப்பட்ட 20ஆவது நாளில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 131ஆக உயர்வடைந் துள்ளது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் மருதனார்மடம் கொத்தணியினால் பாதிக்கப்பட்டவருடன் நேரத் தொடர்புடையவர் என 14 நாள்கள் சுயதனிமைப் படுத்தப்பட்டவர் என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ ஆய்வு கூடத்தில் இன்று 240பேரின் பிசிஆர் மாதிரிகள் பரி சோதனைக்கு உள்படுத்தப்பட்டன. அவர்களில் ஒருவருக்கு மட்டுமே தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. ஏனையோருக்கு தொற்று இல்லை என்று அறிக்கை கிடைத்துள்ளது என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

### தமிழ் அரசியல்...

தற்போதைய கொரோனா தொற்றும் தாக்கியுள்ளதை அறிந்து மீளாத்துயருற்றிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் அவர்களது விடுதலைக்காக பல்வேறு தரப்புகளை சந்தித்து அதரவு கோரிவருகின்றனர்.

அந்தவகையில் தமிழ் அரசியல் கைதிகளை கருணை அடிப்படையில் விடுவிக்க கோரி தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் சார்பில், இலங்கை அரச தரப்பிற்கு கருணை மனுவொன்றை கையளிக்க குரலற்றவர்களின் குரல் அமைப்பு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

குறித்த கருணைமனுவில் கையொப்பமிட்டு ஆதவினை வழங்கி தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு வலுச்சேர்க்குமாறு கோரி யாழ் மாவட்டத்திலுள்ள சர்வமதத் தலைவர்களுடன் அரசியல் கைதிகளின் உறவுகள் இன்று சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

யாழ். நாக விகாரை விகாராதிபதி விமல தேரர், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் யாழ்ப்பாணம்-கிளிநொச்சி மாவட்ட தலைவர் மௌலவி என்.எம். இர்பான், செயலாளர் மௌலவி ஏ.எம். றலீம் உள் ளிட்டவர்களுடன் நேரில் சந்தித்துள்ளனர்.

அதேபோன்று, மானிப்பாய் யாத்திர ஸ்தல பங்குத்தந்தை அருட்பணி ரெக்ஸ்சவுந்திரா அவர்களையும் நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க தமிழ் அரசியல் தரப்பினர் ஒருபக்கம் முயற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையில், அதனை வலுப்படுத்தும் வகையிலான முயற்சிகளில் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### கிளிநொச்சி...

தெரிவிக்கப்படுகின்றது.

மாவட்ட ரீதியில் அறுவடை செய்யப்படும் நெல்லினை அவ்வந்த மாவட்டங்களில் உள்ள அரிசி ஆலைகளிற்கு வழங்கி அரிசியாக சதோச உள்ளிட்ட நிறுவனங்களிற்கு விற்பனை செய்யும் நடைமுறை காணப்படும் நிலையில் கிலோ ஒன்றுக்கு 3 ரூபா பணத்தினை தரகர் கூலியாக பெற்று (லஞ்சமாக) வெளி மாவட்ட அரிசி ஆலைகளிற்கு விற்பனை செய்வதாக அமைச்சருக்கு கிடைத்த தகவலிற்கு அமைவாக குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்யுமாறு அமைச்சரினால் குற்ற புலனாய்வு பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் இன்று விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது மேலதிகமாக பெருந்தொகை பணம் காணப்பட்டுள்ள நிலையில் சம்மந்தமான விசாரணைகள் இடம்பெற்ற வருகின்றன.

குறித்த சம்பவம் தொடர்பாக கொழும்பிலிருந்து வருகை தந்த விசேட குற்ற புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### மண்ணுக்குள்...

அவருக்கு குழந்தை பிறந்துள்ளமை தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரிக்கு தகவல் வழங்கப்பட்டது.

அதுதொடர்பில் இளம் பெண்ணின் வீட்டுக்கு இன்றைய தினம் சென்ற யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி, திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மற்றும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன்போது சிசு புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப் பட்டது.

சிசு இயற்கையாக உயிரிழந்ததா அல்லது கொலை செய்யப்பட்டதா என்பது தொடர்பில் சட்ட மருத்துவ பரிசோதனையின் பின் தெரிய வரும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

# மாகாணசபை தேர்தலை நடத்த வேண்டாம் என மல்வத்துபீடம் வலியுறுத்து!



மாகாணசபை தேர்தலை நடத்த வேண்டாம் என மிக முக்கிய பௌத்த பீடங்களில் ஒன்றான மல்வத்துபீடம் வலியுறுத்தியுள்ளது.

மல்வத்து பீடத்தின் அனுநாயக்கர் திம்புல்கும்புரே விமலதர்ம தேரர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், "மாகாணசபை என்பது வெள்ளை யானை. அதனிடம் வேலை வாங்க முடியாது.

மாறாக உணவுகளை மாத்திரமே வழங்கிக்கொண்டிருக்கவேண்டும். அவ்வாறானதொரு நிலைமை எமது நாட்டுக்கு தேவையில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, இன்று மக்கள் வாழும் பகுதிகளுக்கு நேரில் சென்று பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கிவருகின்றார்.

எனவே, மாகாணசபைகள் வேண்டாம். அதற்கான தேர்தலை நடத்த வேண்டாம் என மகாநாயக்க தேரர்களின் சார்பில் கோரிக்கை விடுக்கின்றேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கோரோனோ மரணம் 199ஆக உயர்வு!

நாட்டில் மேலும் நால்வர் கொரோனா வைரஸ் தொற்றினால் மரணித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று உறுதிப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில், நேற்றைய தினம் பதிவான கொரோனா மரணங்கள் குறித்த முழுமையான விபரங்களை அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 72 வயதான ஆண் ஒருவர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த நிலையில், கொரோனா தொற்றால் ஏற்பட்ட நிமோனியா மற்றும் மூளைக் காய்ச்சல் காரணமாக டிசம்பர் 30 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

அதேபோல, கொழும்பு - 10 பகுதியைச் சேர்ந்த 70 வயதான பெண் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், கொரோனா தொற்றாளர் என அடையாளம் காணப்பட்டு ஹோமாகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், கல்லீரல் நோய் மற்றும் கொரோனா தொற்றால் இரத்தம் விஷமானதால் டிசம்பர் 29ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

அதேநேரம், கொலன்னாவை பகுதியைச் சேர்ந்த 50 வயதான ஆண் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், கொரோனா தொற்றாளர் என அடையாளம் காணப்பட்டு, ஹோமாகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடுமையான சிறுநீரக நோய் தொற்று, மற்றும் உயர் இரத்த அழுத்தத்தால் ஏற்பட்ட மாரடைப்பால் டிசம்பர் 29ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, கொழும்பு - 15 பகுதியைச் சேர்ந்த 66 வயதான ஆண் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது கொரோனா தொற்றால் ஏற்பட்ட நிமோனியா மற்றும் நீரிழிவு நோயால் டிசம்பர் 29ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 199 ஆக உயர்ந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# மேலும் மூன்று சுற்றுலா பயணிகளுக்கு கொரோனா

உக்ரேனில் இருந்து இலங்கை வந்த சுற்றுலாப்பயணிகளில் மேலும் மூன்று பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, உக்ரேனில் இருந்து வந்த சுற்றுலாப்பயணிகளில் 6 பேருக்கு இதுவரை தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொவிட் பெரும் தொற்று காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த சுற்றுலாப் பயணிகளை அழைத்து வரும் வேலைத் திட்டத்தின் கீழ் கடந்த 28 ஆம் திகதி 185 சுற்றுலாப்பயணிகள் உக்ரேன் நாட்டில் இருந்து இலங்கை வந்திருந்தனர்.

பின்னர் இரண்டாவது குழுவாக கடந்த 29 ஆம் திகதி உக்ரேனில் இருந்து மேலும் 204 சுற்றுலாப்பயணிகள் இலங்கை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# காணாமல்போன கிராம அலுவலகர் சடலமாகக் கண்டெடுப்பு



அருவியாற்றுப் பாலத்தின் அடியில் குளிக்கச் சென்றபோது சுழிக்குள் அகப்பட்டு காணாமல்போன கிராம அலுவலகர் இன்று (வியாழக்கிழமை) காலை அரிப்பு பழைய தோனித்துறை பகுதியில் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட கிராம அலுவலகர் நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள தோமஸ்புரி கிராம அலுவலகர் பிரிவில் கிராம அலுவலகராக கடமையாற்றும் ஜனார்த்தனன் (வயது-26) என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நான்கு கிராம அலுவலகர்கள் உள்ளடங்களாக 6 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை மதியம் அருவியாற்றுப் பாலத்தின் அடியில் சமையல் செய்து வருட இறுதி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்பின்னர் கிராம அலுவலகர்கள் ஆற்றில் குளித்தபோது ஒரு கிராம அலுவலகர் காணாமல்போயிருந்ததோடு, ஏனைய அலுவலகர்கள் மீட்கப்பட்டனர்.

இதனையடுத்து, காணாமல்போன கிராம அலுவலகரை தேடும் பணியில் கடற்படை மற்றும் வங்காலை, அரிப்பு கிராம மீனவர்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் இன்று காலை அரிப்பில் இருந்து கடல் தொழில் நடவடிக்கைக்காக சென்ற மீனவர்கள் குறித்த சடலத்தை கண்டு அரிப்பு ஆலய நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து, அருவி ஆற்றில் காணாமல்போன கிராம அலுவலகர் அரிப்பு பழைய தோனித்துறை பகுதியில் இருந்து சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புத்தாண்டு கொண்டாட்டத்திற்கு தடை

2020ம் ஆண்டு இன்றுடன் முடிவடைந்து நள்ளிரவில் புத்தாண்டு பிறக்கிறது. கொரோனா பரவலைத் தடுக்கும் வகையில், தமிழகம் முழுவதும் பொது இடங்கள், விடுதிகள் மற்றும் சுற்றுலாத் தலங்களில் கொண்டாட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டு பிறப்பையொட்டி கிறித்தவ தேவாலயங்களில் நடைபெறும் சிறப்பு பிரார்த்தனையில் பங்கேற்போர் கொரோனா கட்டுப்பாடு விதிகளை கண்டிப்புடன் கடைபிடிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முக கவசம் அணிதல், தனி மனித இடைவெளியை கடைபிடிப்பது உள்பட பல்வேறு கட்டுப்பாடு நடவடிக்கைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி கடற்கரையில் மக்கள் கூட தடை விதிக்கப்பட்டுள்ளதால் விடுதி அறைகளிலும், அரங்குகளிலும் புத்தாண்டை கொண்டாட திட்டமிட்டுள்ளனர். கோவில்கள் உள்ளிட்ட இடங்களிலும் கொரோனா விதிமுறைகளை கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் புத்தாண்டையொட்டி பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. சென்னையில் உணவகங்களையும், நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் கேளிக்கை விடுதிகளில் உள்ள பார்களையும் இரவு 10 மணிக்கு மூட உத்தரவிடப்பட்டுள்ளது.

கடற்கரை வீதிகளில் முற்றிலும் போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. நட்சத்திர ஹோட்டல்கள், கேளிக்கை விடுதிகளில் தடையை மீறி கொண்டாட்டத்தில் ஈடுபட்டால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாநகர பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். வீதிகள், கடற்கரைகள் மற்றும் பொது இடங்களில் புத்தாண்டு கொண்டாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

2 நாட்களுக்கு கடற்கரைகளில் மக்கள் கூட தடை விதிக்கப்பட்டுள்ளது. முக்கிய சந்திப்புகள், பாலங்கள் அனைத்திலும் வீதித் தடுப்புகள் அமைத்து கண்காணிக்கப்படுகிறது.

நேற்று இரவு தொடங்கி விடிய விடிய நகரின் பல்வேறு வீதிகள் மற்றும் முக்கிய சந்திப்புகளில் வாகன சோதனை நடைபெற்றது. இரவு முழுவதும் ரோந்துப் பணியும் முடுக்கிவிடப்பட்டிருந்தது.

மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, கிழக்கு கடற்கரை வீதிகளில் பொலிஸார் அதிகளவில் கண்காணிப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

அனுமதியின்றி புத்தாண்டு நிகழ்ச்சிகள் நடக்கிறதா என்பதைக் கண்காணிக்கவும், சுற்றுலா தலங்கள், கடற்கரைகளில் தடையை மீறி திரள்பவர்களை தடுத்து நிறுத்தும் வகையிலும் சிறப்பு ரோந்து படைகள் அமைக்கப்பட்டுள்ளன

# 5 கொரோனா நோயாளிகள் தப்பியோட்டம்

கொரோனா தொற்றுக்கு உள்ளான நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சைப் பெற்று வந்த 05 பேர் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலன்னறுவை-கல்லேலை பகுதியில் உள்ள கொரோனா நோயாளிகள் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த கொரோனா தொற்றாளர்களே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து, அவர்களை தேடும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.